**நானாவித வெளிநாட்டு உதவியளித்தலின் கீழான 46 பாலங்களை புனரமைத்தல் செயற்திட்டம் 2015**

நானாவித வெளிநாட்டு உதவியளித்தலின் கீழான 46 பாலங்களை புனரமைத்தல் செயற்திட்டத்தின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்ஸின் என்ஏரீஜஎக்ஸ்ஜஎஸ் விங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 05 ஆந் திகதிய பீ92 0ஏ1 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. இலங்கையில் 46 உருக்குப் பாலங்களை வழங்கி நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7,564 மில்லியனுக்குச் சமமான யூரோ 45.80 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,642 மில்லியனிற்குச் சமமான யூரோ 22.05 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு பிரான்ஸின் என்ஏரீஜஎக்ஸ்ஜஎஸ் வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 17 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2015 யூலை 17 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. இருப்பினும், செயற்திட்டச் செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் தொடரப்பட்டிருந்தன.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான

அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாடு மற்றும் செயற்திட்ட செயற்படுத்துகைகள் தொடர்பிலான ஏடுகள், பதிவேடுகள் போன்றவற்றின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்கல் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக உத்தரவுபெற்ற வர்த்தக வங்கி ஒன்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 471.71 மில்லியன் விசேட கடன் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. கடனை மீளளிப்பதற்கு செயற்திட்டத்தினால் இணங்கப்பட்ட பொறிமுறை கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறிதியில் உள்ளவாறு ஒப்பந்த தாரர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் தவறாக கணிப்பிடப்பட்டிருந்தன. அதன் விளைவாக, 06 பாலங்களை புனரமைப்பதில் ஈடுபட்டிருந்த ஒப்பந்த தாரர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 20.88 மில்லியன் தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 09 பாலங்களை புனரமைப்பதில் ஈடுபட்டிருந்த ஏனைய ஒப்பந்த தாரர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 83.29 மில்லியன் மீதிகளும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 13.66 மில்லியன் தொகையான பிடி காசும் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 174.83 மில்லியன் தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகள் அறவிடப்பட வேண்டிய தொகைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தவறான கணக்கீட்டு தீர்வுகள் காரணமாக ரூபா 37.39 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) செயற்திட்டக் காலப்பகுதியில் ஒப்பந்த தாரர்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1.32 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

3. **நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

---

3.1 **நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மூலம்** | **கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | **யூரோ மில்.** | **ரூபா மில்.** | **ரூபா மில்.** | **யூரோ மில்.** | **ரூபா மில்.** | **யூரோ மில்.** | **ரூபா மில்.** |
| பிரான்ஸின் என்ஏரீஜஎக்ஸ்ஐஎஸ் வங்கி | 22.05 | 3,642 | 725 | 4.50 | 719 | 22.39 | 3,551 |
| ஜீஓஎஸ்எல் | 23.75 | 3,922 | 1,049 | 6.88 | 1,050 | 10.82 | 1,700 |
| மொத்தம் | **45.80** | **7,564** | **1,774** | **11.38** | **1,769** | **33.21** | **5,251** |

3.2 **பௌதீக செயலாற்றல்**

செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் 46 பாலங்களை புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 50 பாலங்களிற்கான கூறுகளை ரூபா 3,642 மில்லியனுக்குச் சமனான யூரோ 22.05 மில்லியன் கிரயத்தில் வழங்குவதற்காக 2012 திசெம்பர் 12 ஆந் திகதி வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 17 சரத்தின் பிரகாரம், 730 நாட்களிற்குள் பயன்பாட்டிற்குரிய அனைத்து உபகரணங்களுடனும் கூடிய பாலங்களின் கூறுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியில் அனைத்துப் பாலங்களின் கூறுகளினதும் வழங்கல் பூரணப்படுத்தப்பட வேண்டுமாயினும் அவற்றில் 31 பாலங்களின் புனரமைத்தல் மாத்திரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருந்தன. 19 பாலங்களின் புனரமைத்தல் வேலைகள், ஒப்பந்தங்களை வழங்குவதன் தாமதம் காரணமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.3 **ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம், கொடுப்பனவுக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு 21 நாட்களினுள் செயற்திட்டப் பொறியியலாளர்களினால் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றுக்கான கொடுப்பனவுகள் அடுத்துவரும் 14 நாட்களிற்குள் தீர்க்கப்படுதலும் வேண்டும். இருப்பினும், 09 பாலங்களின் புனரமைத்தல்களுடன் தொடர்புடைய ரூபா 96 மில்லியன் பகுதிக் கொடுப்பனவு, செயற்திட்டப் பொறியியலாளர்களினால் மெய்மையாய்வு செய்யப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கடுகுருந்த – நேபொட வீதியிலுள்ள 12/3 ஆம் இலக்க பாலத்தின் புனரமைத்தல் வேலைகளிற்கான காலநீடிப்பு 2014 யூலை 01 வரை 14 நாட்களிற்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 05 ஆந் திகதியன்றே புனரமைத்தல் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், ரூபா 12.03 மில்லியன் இறுதிக் கொடுப்பனவு ரூபா 1.14 மில்லியன் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாது தீர்க்கப்பட்டிருந்தது. அத்துடன், முறையே 36 நாட்கள் மற்றும் 56 நாட்கள் தாமதத்துடன் பூரணப்படுத்தப்பட்டிருந்த மாகொல - உடுபில வீதியிலுள்ள 10/1 ஆம் இலக்க பாலம் மற்றும் இங்கிரிய - ஹல்வதுர - இகலோய வீதியிலுள்ள 5/4 ஆம் இலக்க பாலம் ஆகியவற்றின் புனரமைத்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்த தாரர்களிற்கான தாமதக் கட்டணங்கள் நிச்சயிக்கப்பட்டு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், அனைத்துக் கொள்வனவுகளிற்குமான மதிப்பீடுகள் கொள்வனவுகளின் மொத்தக் கிரயத்தினது சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், பாலங்களினது புனரமைத்தல்களின் விடயப்பரப்பு மாற்றங்கள் மற்றும் பலவீனமான வடிவமைத்தல்களின் விளைவாக ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டிருந்த 09 பாலங்களின் ரூபா 102.65 மில்லியன் புனரமைத்தல் வேலைகளிற்கு ரூபா 64.33 மில்லியன் கிரயம் கொண்ட முரண் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளில் வந்துரும்பே – எதிமலை – யக்கதுவ வீதியிலுள்ள 33/1 ஆம் இலக்க பாலத்தின் நடை பாதையின் மூடப்பட்ட கொங்ரீட் தளப்பரப்பு வெடிப்புற்றிருந்தமையும் பாலத்தின் கல்வனைஸ் சட்டங்கள் முறையாக பொருத்தப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன், பதுளை புகையிரத நிலைய வீதியிலுள்ள 1/1 ஆம் இலக்க பாலத்தின் புனரமைத்தல் வேலைகள் சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(உ) ஒப்பந்த உடன்படிக்கையின் iv (எ) பின்னிணைப்பின் பிரகாரம், புனரமைத்தல் மற்றும் பேணுதல் நோக்கங்களிற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்குனரால் வழங்கப்படுதல் வேண்டுமாகையால், 15 பொறியியலாளர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டக் காலத்தின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 03 பொறியியலாளர்களிற்கு மாத்திரம் வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. போதியளவு தொழில்நுட்ப அறிவுடன் கூடிய பதவியணியினர் பற்றாக்குறையாக காணப்படுகின்றமை புனரமைக்கப்பட்ட பாலங்களின் எதிர்கால பேணுகைக்கு தாக்கமளிக்கும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் அநேக நிதி உதவியளித்தல் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மின்சாரம், கட்டிட வாடகை, செய்திப்பத்திரிகைகள் மற்றும் தொலைபேசி போன்றவற்றிற்காக ஏற்பட்டிருந்த ரூபா 2.17 மில்லியன் தொகை ஏனைய செயற்திட்டங்களிற்கிடையே பொருத்தமாக பகிந்தளிக்கப்படாது செயற்திட்ட முகாமைத்துவச் செலவினம் என செயற்திட்டத்திற்கு சாட்டப்பட்டிருந்தது.

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிற்கான படிகள் தவறாக கணிப்பிடப்பட்டு அதற்காக ரூபா 161,000 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------------------

செயற்திட்டத்தின் பதவியணியினர் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 18 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக காணப்பட்ட போதிலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 33 பதவி நிலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 06 பொறியியலாளர்களையும் 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்திட்டத்தின் முக்கியமான பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளிற்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்பட்டன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் உள்ளடங்கியிருக்காத மதியுரைஞர், பாரமற்ற உபகரண இயக்குவோர் மற்றும் கணனி வன்பாக தொழில்நுட்பவியலாளர் பதவிகளிற்காக செயற்திட்டத்தினால் 03 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3.6 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களிற்கான ரூபா 95,698 தொகையான மருத்துவ விடுமுறைக் காசாக்குதல் மற்றும் ரூபா 101,250 உபகாரக் கொடுப்பனவு என்பன 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 5.4 ஆம் பிரிவிற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள்நிரப்பப்பட்டிருந்தது.

(ஆ) இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.24 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய நிதி உதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தினால் ஈடுபடுத்தப்பட்டிருந்த மதியுரைஞர் ஒருவருக்கும் பொதுமக்கள் இணைப்பு உத்தியோகத்தருக்கும் ரூபா 293,393 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் மோட்டார் வாகன வாடகைக் கட்டணங்கள் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 செயற்திட்டச் செயற்பாடுகளை மூடிவிடுதல்**

-----------------------------------------------------------

17 பாலங்களின் புனரமைத்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்த தாரர்களின் ஊடாக ரூபா 2.27 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடங்களும் உபகரணங்களும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அப் பாலங்களின் புனரமைத்தல் வேலைகள் முடிவடைந்திருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.